1973 மார்ச் 15]

கொடுப்பதற்காக ஆங்கில இலக்கியம் கற்ற, லிட்டரேச்சர் பாடம் கற்றவர்களை பி.ஏ., பி.டி., ஆசிரியர்களாக நியமிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்லூரியில் பயிற்றுவிப்பதற்கே போதுமான அளவிற்கு ஆங்கில மொழியில் பயிற்சி பெற்ற பேராசிரியர்கள் அல்லது ஆசிரியப் பெருமக்கள் கிடைப்பதில்லை. அங்கேயே பொருளாதாரம், வரலாறு படித்த மேல் பட்டதாரிகளை வைத்து தான் ஆங்கிலம் கற்பிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே எம்.ஏ., வகுப்பில் ஆங்கிலம் எடுத்துப் படிப்பவர்களுக்கு மாதம் ரூ. 100 இன்ஸென்டிவாகக் கொடுத்து—சிறப்பூதியமாகக் கொடுத்து—படிக்கவைத்தாலும் கூட போதுமான அளவு ஆங்கில ஆசிரியர்கள் கல்லூரிகளுக்கே கிடைக்காத நிலையில் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கிடைப்பது என்பது அரிது.

திரு. கே. ஏ. வகாப் : ஆங்கிலம் உலக மொழியாக, விஞ்ஞான வளர்ச்சியை அறிந்து கொள்ளுவதற்கு ஏற்ற மொழியாக இருப்பதால் அதிலே மாணவர்கள் நல்ல அறிவு பெற்று வளர்ச்சியுற அரசாங்கம் அக்கறை செலுத்தி வருகிறதா ? ஐ.ஏ.எஸ். பரிட்சைகளில் எல்லாம் கான்வெண்டில் படித்து வெளி வந்தவர்கள் அதிக வாய்ப்புப் பெறும் அளவுக்கு இருக்கிறது. ஆகவே, நம்முடைய பள்ளிகளின் தரத்தையும் கான்வெண்ட் பள்ளிகளின் தரத்திற்கு உயர்த்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் பள்ளிகளில் ஆங்கில அறிவைப் போதிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஐ.ஏ.எஸ். பரிட்சை எழுதி வெற்றி பெறுவதற்கேற்றவாறு பயிற்சி தர பிற்பட்ட மாணவர்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காகவும் தனிப் பயிற்சி நிறுவனம் அமைக்கப் பெற்று அதன்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : மாணவர்கள் ஆங்கிலத்தின் தரத்தில் உயர்ந்து நிற்பதற்கு முதல் வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தைக் கற்றுத் தரும் அளவுக்கு நிலைமைகளை உருவாக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இவற்றை எல்லாம் கல்வி வல்லுநர்கள் முடிவு கட்டுகிறார்கள். இப்போது மூன்றாவது வகுப்பில் இருந்து கட்டாயமாக ஆங்கிலப் பயிற்சி இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் தான் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. கு. காமாட்சி.: ஆங்கில அறிவு நல்ல முறையில் பெருகவும் கல்வியினுடைய தரம் உயரவும் நம் நாட்டில் இருக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் கிண்டர் கார்டன்—பாலர் பள்ளிகள் அமைத்து ஐந்து வயதுக்குக் கீழே உள்ள குழந்தைகளுக்கு மூன்று, நான்கு வயதுக் குழந்தைகளுக்கு நல்லபடி போதிக்க அரசு செயற்குறிப்பு வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த முயற்சியில் அரசு ஈடுபடுவதில்லை. தனிப்பட்டவர்கள் பல்வேறு இடங்களில் அப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டு அப்படிப்பட்ட பள்ளிகளைத் திறந்து நடத்தி வருகிறார்கள்.

[1973 மார்ச் 15

மன்னியாற்றின் குறுக்கே பாலம்.

* 375 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

மாயூரம் தாலூகாவில் கடலங்குடி, பூதங்குடி, ஆகிய கிராமங்களை இணைக்க, மன்னியாற்றுக்குக் குறுக்கே foot bridge ஒன்று அமைக் கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. எஸ். வடிவேல் : மாயூரம் தாலூகாவுக்கும் சீர்காழி தாலூகா வுக்கும் இணைப்பாக உள்ள இடம் இந்த மன்னியாற்றுப் பாலம். அந்தப் பாலம் இருந்தால் அரை மணியில் செல்லலாம். இப்போது ஒன்றரை மணி ஆகிறது சுற்றிப் போவதற்கு. ஆகவே, துரிதமாக அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கடலங்குடி பூதங்குடி கிராமங்களை இணைக்க திருப்பனந்தாள் என்ற ஊரின் தெற்குச் சாலையில் பூதங்குடி என்ற ஊரிலே ஓடுகின்ற மன்னியாற்றில் தரைப் பாலம் கட்ட தோராயமாக 30,000 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. 40,000 ரூபாய்க்கு உட்பட்டு இருக்கும் காரணத்தால் இந்தப் பணியை ஊராட்சி ஒன்றியந்தான் செய்ய வேண்டும் என்று பொதுப் பணித் துறையினர் தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றி அரசி னுடைய பரிசீலனைக்கு ஏதும் செயற்குறிப்பு வரவில்லை.

திரு. எஸ். வடிவேல் : ஊராட்சி ஒன்றியமே இதைத் கட்ட வேண்டுமென்றால் கையில் பணம் இல்லையென்று சொல்லுகிறார்கள். இதனால் ஜனங்களின் போக்குவரத்துக்குத்தான் தடையாக இருக்கிறது. ஆகவே, அரசு எப்படியாவது நடவடிக்கை எடுத்து அந்தப் பாலத்தைக் கட்டித்தர முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியம் செய்கின்ற பணிகளில் இதையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வட்டார வளர்ச்சிக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வேண்டுமானால் சொல்லலாம்.

வடார்க்காடு மாவட்டத்திலுள்ள பீடித் தொழிலாளர்கள்.

* 376 வினா.—திரு கே. எ. வகாப்) :
திரு. என். கிட்டப்பா) : } மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காட்டில் உள்ள பீடித் தொழிலாளர் குறைகளை கவனிக்க குழு ஏதும் நிறுவப்பட்டுள்ளதா ?

(இ) ஆம், எனில், அதில் அங்கம் வகிப்பவர் யார், யார் ?